

# பழவேற்காடு
# புனித மகிமை மாதா

# பழவேற்காடு புனித மகிமை மாதா திருத்தல வரலாறு

## 1. பழவேற்காடு இயற்கை அமைப்பு

பழவேற்காடு இயற்கை எழில் கொஞ்சும் கடற்கரை சிற்றூர், வங்கக்கடலோரம் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி தாலுக்காவில் அமைந்துள்ள பழமையும் பெருமையும் மிக்க ஊராகும். முற்காலத்தில் இவ்வூரை பிரளய காவேரி என மக்கள் அழைத்தனர். ஆங்கிலத்தில் புலிகாட் (Pulicat) என்பர். சென்னையிலிருந்து வடக்கே சுமார் 56 கி.மீட்டர் தூரத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. பழவேற்காடு என்பது சுமார் 22 மீனவர் குப்பங்களை கொண்டது. ஒவ்வொரு குப்பத்திற்கும் தனித்தனிப் பெயர் உண்டு. இதில் ஒரே ஒரு கிராமமாகிய நடுவூர் மாதாக் குப்பத்தில் மட்டுமே கிறிஸ்தவர்கள் வாழ்கின்றனர். ஒரு கிராமத்தில் முஸ்லிம்கள் மட்டும் வாழ்கின்றனர். ஆனால் அனைத்துக் குப்பங்களும் சேர்ந்து அழைக்கப்படுவது பழவேற்காடு என்ற ஒரே பெயரில் தான்.

பழவேற்காடு மூன்றில் இரண்டு பங்கு நீரால் சூழப்பட்ட அழகிய தீவு. பழவேற்காடு ஏரி இந்தியத் துணைக் கண்டத்திலேயே இரண்டாவது மிகப்பெரிய ஏரியாகும். இங்கு கடலும், நதியும் சங்கமமாகும் பெரிய முகத்துவாரம் உள்ளது. இந்த முகத்துவாரத்தின் வழியே ஆறு மணி நேரம் ஆற்று நீர் கடலுக்குள்ளும், ஆறு மணி நேரம் கடல் நீர் ஆற்றுக்குள்ளும் மாறி, மாறி இடம் பெயர்வது அற்புதமான இயற்கை நிகழ்வாகும்.

## 2. தொழில் முறை

பழவேற்காடு மக்களில் பெரும்பாலோர் மீன்பிடி தொழில் செய்பவர்கள். இங்கு தரம் வாய்ந்த இறால், நண்டு போன்றவை ஆண்டுதோறும் மிகுதியாகக் கிடைக்கின்றன. வடக்குப் பகுதியில் வாழ்வோரில் சிலர் விறகு வெட்டுதல், கூலி வேலை போன்றவற்றை செய்து வருகின்றனர். மீனவர் பிடிக்கும் மீன்களை பழவேற்காட்டை அடுத்துள்ள கிராமங்களில் வாழும் மக்கள் வாங்கிச் செல்வர். தரமான மீன்வகைகள் இறால், நண்டு போன்ற கடல் உணவுப் பொருள்கள் அருகாமையில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாய் மூலம் படகுகளில் எண்ணூருக்கும், அங்கிருந்து சென்னை நகருக்கும் தகுதியான விலைக்காக கொண்டு செல்லப்பட்டன.

அதிகப்படியான மீன்கள் பதப்படுத்தப்பட்டு தேவைப்படும் போது கருவாடு என்ற நிலையில் விற்கப்படுகின்றன. தற்போது சிறந்த சாலை வசதி இருப்பதினால் விடியற்காலையில் போக்குவரத்து வாகனங்கள் மூலமாக சென்னைக்கு எடுத்துச்சென்று விற்பனை செய்யப்படுகின்றன. பெண் வியாபாரிகள் கூடைகளில் அருகாமையில் உள்ள கிராமங்களுக்கு சிறிய உந்து வண்டிகள் மூலமாகவும், பேருந்துகள் மூலமாகவும் எடுத்துச் சென்று விற்பனை செய்து மாலையில் திரும்புகின்றனர். இங்கு மக்கள் யாதொரு பாகுபாடின்றி பழகியும், வாழ்ந்தும் வருகின்றனர். இவர்கள் மீன்பிடி தொழிலுக்கு பயன்படுத்தப்படுவது மரத்தினால் செய்யப்பட்ட சிறு, சிறு படகுகள், மூங்கிலில் செய்யப்பட்ட கோல்கள் மற்றும் சவுக்கு கழிகள், பருத்தி நூலில் செய்யப்பட்ட வலைகள் ஆகும். இவ்வலைகளை தேவைக்கு ஏற்றபடி இம் மீனவர்களே தயாரித்து மாற்றி அமைத்துக்கொள்கின்றனர். தற்போது நைலான் மீன்பிடி வலைகள் பரவலாக அனைத்து மக்களாலும் பயன்படுத்தப்படுகின்றன. இயந்திரப்படகுகளும், மீன்பிடி தொழிலில் இப்போது மீனவர்கள் பயன்படுத்துகின்றனர்.

## 3. மகிமை மாதாவின் தோற்றம்

அந்த நாளில் ஒரு நாள் அதிகாலையில் பழவேற்காடு மீனவர்கள் சிலர் கடலுக்குள் சென்று வலை வீசினர். வலையை கரைக்கு இழுத்து வந்தபோது மீன்கள் ஏதும் இல்லாமல் மரக்கட்டை ஒன்று வலையில் சிக்கி இருப்பதைக் கண்டனர். மீன் கிடைக்காத கோபத்தில் கட்டையை கடலுக்குள் தூக்கி வீசி விட்டு வேறோர் இடம் சென்று வலையை விசினர். இம்முறையும் அந்தக் கட்டை அவர்கள் வலையிலேயே சிக்கியது. ஆனால் அக்கட்டையை கடற்கரை ஓரமாக வீசிவிட்டு மறுபடியும் வலையை கடலுக்குள் வீசினர். மீன்பிடி வலையில் இருமுறை சிக்குண்ட மரக்கட்டை கடற்கரை ஓரமாய் தனியே கிடந்தது. மீனவர்களுக்கு மூன்றாம் முறையாய் வேறு பக்கம் வீசிய வலையில் ஏராளமான மீன்கள் பட்டது மகிழ்வைத் தந்தது. மகிழ்ச்சியின் பெருக்கில் மீனவர்கள் கடற்கரை ஓரமாய் அவர்களால் தூக்கி வீசப்பட்ட கட்டையை மறந்து வீடு திரும்பினர்.

மறுநாள், வழக்கமாக கடற்கரை ஓரமாய் ஆற்று நீரில் அடித்து வரப்பட்டு வந்து கடலில் சேர்ந்து கரை ஒதுங்கிய விறகுகள் மற்றும் கட்டைகளைப்பிளந்து வெட்டி, வயிற்றுப் பிழைப்பு நடத்தும் விறகு வெட்டியின் கண்களில் அக்கட்டை தெரிந்தது. பார்த்தவுடன் புரட்டிப் புரட்டிப் பார்த்து வெட்டுவதற்கு ஏற்றபடி வைத்துக் கொண்டு கோடாரியால் பிளந்தான். கோடாரி வெட்டப்பட்ட இடத்திலிருந்து அதிசயமாக இரத்தம் பீறிட்டு அவன் கண்களில் தெறித்தது. கண்களில்

பட்ட இரத்தத் துளிகளால் பார்க்கும் சக்தியை முழுவதுமாக அவ்விறகுவெட்டி இழந்து கதறினான், தவித்தான் அழுதான். அதே இடத்தில் அழுது, அழுது புரண்டான்.

விறகு சேகரிக்கச் சென்ற தன் கணவன் வெகு நேரமாகியும் வீட்டிற்கு வராததால் அவனது மனைவி கஞ்சிக் கலயத்துடன் அவனைத் தேடிய வண்ணம் கடற்கரையோரமாய் மெதுவாய் நடந்தாள். நடந்தவள், அழுது புரண்டு துடிக்கும் கணவனின் அலங்கோலம் அவளையும் கூட அழ வைத்தது.

நடந்த நிகழ்ச்சிகளை அவளது கணவன் அழுத வண்ணமாய் ஒன்று விடாமல் விவரித்தான். அருகில் கிடந்த அந்த மரக்கட்டையை இவளும் உருட்டினாள், புரட்டியும் பார்த்தாள். பார்த்தவள் கண்ணில் மிரட்சி காணப்பட்டடது. ஆம், அப்பெண் கண்ட காட்சியால் அன்றே இம்மண் அற்புத சாட்சியானது. கட்டையில் ஒரு தெய்வீகப் பெண்ணின் சாயல் தெரிவதை கண்களால் கண்டாள். அக்கட்டையைப் பிடித்து அப்பெண் ஐயோ, என் கணவனுக்கு பார்வை கொடுங்கள் அவன் தான் என் வாழ்வு, அவனின்றேல் நானில்லை என்றே கதறினாள். அக்கட்டையிலிருந்து இரத்தத்தை எடுத்து கணவன் கண்களின் மீது தடவினாள், என்னே ! ஆச்சரியம். கணவன் கண்களில் ஒளி தோன்றியது. பார்வை கிடைத்ததை மனைவியிடம் கூறி சந்தோஷத்தால் துள்ளிக் குதித்தான். இருவரும் அந்தக் கட்டையைக் கொண்டுவந்து நடந்தவற்றை அந்த ஊர் மக்களுக்கு விவரித்தனர். கிராம மக்கள் காதுகளில் அற்புத நிகழ்ச்சி காட்டுத் தீ போல் வேகமாக பரவியது. பழவேற்காட்டின் சுற்றுப்புறக் கிராம மக்கள் திரண்டு வந்து பார்த்தனர். கிராம மக்கள் ஒன்று சேர்ந்து அத்தெய்வீகக் கட்டையை உற்றுப்பார்த்து கடல்பாசி படிந்திருந்த அத்திருவுருவைச் சுத்தம் செய்து குடிசைக் கோயில் அமைத்து வணங்கினர்.

## 4. போர்ச்சுக்கீசியர் வருகை

கி.பி. 1500–ல் போர்ச்சுக்கீசியர்கள் பெருமளவில் தென்னிந்தியாவின் பல இடங்களில் குடியேறினார்கள. அவர்கள் கிழக்கு கடற்கரையில் முதன்முதலாக வந்து இறங்கியது 25 ச.கி.மீ. பரப்பளவுள்ள ஏரியும், பெரிய முகத்துவாரமும் அடங்கிய பழவேற்காடு மீனவ கிராமமாகும். வியாபாரம் செய்ய வந்து தங்கிய போர்ச்சுக்கீசிய மாலுமிகளுக்கு காய்கறி விற்பனை செய்வதற்கு சிறுவன் ஒருவன் செல்வது வழக்கம். இந்த சிறுவன் குடிசைக் கோயில் மக்கள் வழிபட்ட தெய்வீக திருவுருவைக் கண்டு, தான் இதை போர்ச்சுக்கீசியர்களின் பாய்மரக் கப்பலில், மெழுகு திரிகள் ஏற்றி அவர்கள் வணங்கியதைக் கண்டதாக ஊர்மக்களுக்கு அறிவித்தான்.

ஓர் ஆண்டிற்குப் பின் வணிகர்களான போர்ச்சுகீசியர்கள் மலாக்காவிலிருந்து மீண்டும் பழவேற்காடு திரும்பி வந்தனர். மக்கள் அவர்களை அணுகி தெய்வீக உருவத்தின் அற்புத நிகழ்ச்சியை அறிவித்தனர். மேலும் அவர்களை அழைத்து வந்து அக்குடிசைக் கோயிலில் அமைந்த திருவுருவைக் காணச்செய்தனர். புயல்காற்றினால் சிக்கிய தங்களது படகிலிருந்து அடித்து வரப்பட்டது தான் அந்த தெய்வீக தேவமாதா சுரூபம் என்று கூறினர். அச்சுரூபத்தை மேலும் அழகுறச் செய்து மீண்டும் கிடைத்த அன்னையின் திருவுருவத்திற்கு சந்தோஷ மாதா (Our Lady of Joy) என பெயரிட்டு கி.பி. 1515-ம் ஆண்டு சிற்றாலயம் எழுப்பினர். மகிழ்ச்சியோடு அன்னை மரியாளுக்கு விழாவும் எடுத்தனர்.

கி.பி. 1515-ல் புதிதாக கட்டப்பட்ட ஆலயத்தில், கத்தோலிக்க மக்களிடையே முதல் குருவாக பணியாற்றியவர் ஃபாதர் அந்தோணியோ ஜில் (Fr. Antonio Gil) இவர் 1521-ல் கிறிஸ்தவர்களை திருயாத்திரையாக மைலாப்பூருக்கு அழைத்து வந்ததாகவும், புனித தோமையார் கல்லறையில் திவ்யநற்கருணை திருவிழாவின்போது திருப்பலி நிறைவேற்றியதாகவும் பதிவேட்டிலிருந்து அறியலாம்.

## 5. டச்சுக்காரர்களின் வருகை

கி.பி. 1606 ஆம் ஆண்டில் டச்சுக்காரர்கள் வியாபாரத்தை மையமாகக் கொண்டு பழவேற்காடு போன்ற பல இடங்களில் குடியேறினார்கள். ஆங்காங்கு வியாபார பெருக்கத்தின் அடிப்படையில் பழவேற்காட்டை மையமாகக் கொண்டு இங்கு கிடைக்கும் மைக்கா, பவளம் போன்றவைகளின் மூலம் இவர்கள் வியாபாரம் செழித்து வந்தது.

இவர்கள் சம்மான் எனப்படும் மரக்கப்பல்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி பெரிய முகத்துவாரத்தின் வழியாக பழவேற்காட்டு ஆற்றில் புகுந்து, பல இடங்களுக்கு செல்வார்கள். இவர்கள் வியாபாரம் பெருகியது. ஆற்றின் கரையோரத்தில் பெரிய கட்டிடங்களுடன், அரண்மனைகளைப் போல கட்டி வாழ்ந்தனர். இவர்கள் ஆட்சி புரிய கோட்டையும், கொத்தளங்களும் கட்டி பெரும் அரசை ஏற்படுத்தினார்கள். இவர்கள் அவ்வப்போது போர்ச்சுக்கீசியர்களுடன் போரிட்டு இவ்விடத்தை தங்களது ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ள முன்வந்தார்கள்.

நீரால் சூழப்பட்ட இவ்வூரில் வாழ்ந்த டச்சுக்கார வியாபாரிகள் மருத்துவ வசதி இன்மையாலும் தட்பவெப்ப நிலை காரணமாகவும் நோயினால் பீடிக்கப்பட்டு அநேகர் இறந்தனர். அவர்களின் உயர் அதிகாரிகள் 76 பேரின் சடலங்கள் பாழடைந்த கோட்டைக்கு எதிரே உள்ள கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. மேலும், சாதாரண சிப்பாய்கள் 19 பேரின் உடல்கள் மாதா கோயிலின் பின்புறத்தில் சுமார்

0.20 கி.மி. தொலைவில் வைக்கப்பட்டிருக்கின்றன. தற்போது இவையிரண்டும் அழியாத நினைவுச்சின்னங்களாக அரசாலும், ஆலய நிர்வாகத்தாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

டச்சுக்காரர்கள் காலத்தில் 17–ம் நூற்றாண்டில் ஏராளமான கிறிஸ்தவர்கள் வாழ்ந்தபடியால், போர்ச்சுக்கீசியர்களால் அவர்கள் நாட்டு கலை நுணுக்கத்துடன் மரத்தினால் செய்யப்பட்ட திருப்பலி பீடம் ஊர்மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றது. அழகிய பொன் முலாம் பூசப்பட்டு உருவாக்கப்பட்ட திருப்பலி பீடத்தை அழிக்க மனம் வரவில்லை. அதனை சிதைக்காமல் திருப்பலி பீடம் இருந்த இடம் தவிர ஆலயத்தின் ஏனைய பகுதிகள் புதுப்பிக்கப்பட்டு விரிவு படுத்தப்பட்டன. அன்னையின் மகிமையை அனைவருக்கும் வெளிப்படுத்த புதுப்பிக்கப்பட்ட ஆலயத்திற்கு **மகிமை மாதா ஆலயம்** என்று அழகிய பெயர் சூட்டி ஆடம்பர விழா எடுத்தனர்.

இன்றும் அழியாத சின்னமாக திருப்பலி பீடம் பாதுகாக்கப்பட்டு அன்னையின் திருவுருவம் தாங்கி நின்று வந்தோரை பக்தியில் ஆழ்த்தி வரவேற்கின்றது.

## 6. ஆங்கிலேயரின் வருகை (கி.பி. 1825)

17–ஆம் நூற்றாண்டில் பழவேற்காடு பன்னாட்டு வியாபார ஸ்தலமாக இருந்து வந்தது. அக்காலத்தில் அடிக்கடி வியாபாரத்தின் காரணமாக போர்ச்சுக்கீசியர்களுக்கும், டச்சுக்காரர்களுக்கும் போர்கள் பல நடைபெற்றன. இதற்கிடையில் இவ்விடத்தின் சிறப்பு காரணமாக ஆங்கிலேயர்களும் படையெடுத்தனர். (கி.பி.1825) மரக்கலங்கள் வந்து செல்ல ஏதுவாக கி.பி.1859 ஆம் ஆண்டு கலங்கரை விளக்கம் ஒன்றையும் அமைத்தார்கள். பிறகு வியாபாரத்தை எளிதாக்கவும், மேலும் பெருக்கவும் தற்போதைய ஆந்திர மாநிலத்தின் விஜயவாடாவிலிருந்து தமிழ்நாட்டின் மரக்காணம் வரை பக்கிங்ஹாம் கால்வாய் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்திற்காக இவர்களால் அமைக்கப்பட்டது. மரக்கலங்கள் தங்கி இறக்கவும், மாலுமிகளிடம் சுங்கம் வசூலிக்கவும், துறைமுகத்தை ஏற்படுத்தி அதற்கு தோணி ரேவ் என்று பெயரிட்டனர். அந்த இடம் இன்றும் தோணிரேவ் என்று அழைக்கப்படுகிறது.

## 7. சென்னை-மயிலை மறைமாவட்டத்தின் முதல் திருத்தலம்

கி.பி. 1762 ஆண்டு முதல் ஞானஸ்நானம், திருமணம், பிறப்பு, இறப்பு போன்ற நிகழ்வுகள் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டு இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

29–3–1882 ஆம் ஆண்டு பழவேற்காடு புனித மகிமை மாதா ஆலயம் தனிப்பங்கானது. அன்று முதல் இன்றைய நாள் வரையிலும்

இவ்வாலயம் திருயாத்திரைத் திருத்தலமாக அமைந்து பக்கதர்களுக்கு அருள்பாலிக்கின்றது. முதல் பங்கு தந்தையாக ஃபாதர் அந்தோனியோ பிரான்சிஸ்கோ கமில்லோ டி பத்ரோகினியோ (Fr. Antonio Francesco Camillo de Patrocinio) நியமிக்கப்பட்டார்.

இத்திருத்தலமே சென்னை–மயிலை மறை மாவட்டத்தின் முதல் திருத்தலமாகும். முன்பு குருக்கள் சென்னை இராயபுரம் மற்றும் எண்ணூர் பங்குத் தளங்களில் இருந்து சாலை வசதியில்லாத காரணத்தால் பங்கிங்ஹாம் கால்வாயில் படகுகள் மூலம் வருவார்கள் இவ்வூரில் திருப்பலி நிறைவேற்றி அருட்சாதனங்களை மக்களுக்கு வழங்கினார்கள்.

பின்னர் இப்பகுதி மக்களின் பெருமுயற்சியால் ஆட்சியாளர்களை அணுகி கி.பி. 1957ல் சாலை வசதி அமைக்கப்பட்டது.

## 8. புனித மகிமை மாதா திருத்தலப் புதுமைகள்

(1) முன்னொரு நாளில் பழவேற்காடு கிராமத்தில் மீன்பிடி தொழில் செய்வதற்காக பெரிய வலைகள் படகில் வைக்கப்பட்டு அதன்மேல் பெரியவர் ஒருவர் படுத்து உறங்கினார். இரவு நேரத்தில் வீசிய பெரும் புயல் காற்றினால் கயிறு அறுந்து கட்டப்பட்டிருந்த படகு வலைகளோடு பெரியவரும் முகத்துவாரத்தின் வழியாக சுமார் 20 கி.மீ. தூரம் அலைகளால் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டார்.

உறங்கிய பெரியவர் விழித்துப்பார்த்தபோது தரை தெரியாமல் சுற்றிலும் தண்ணீர் இருப்பதைக் கண்டு வெகுதொலைவில் கடலில் இருப்பதைக் கண்டு பயந்து விட்டார். அவருக்கு ஒரு யோசனை வந்தது. மேலும் கடலுக்குள் செல்லாமல் இருக்க படகில் இருந்த வலைகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து மூட்டையாகக் கட்டி படகின் நுனியில் நங்கூரம் போல் தொங்க விட்டார். உடனே படகு நின்றது. அந்த இரவில் அன்னை மரியாள் இவருக்குக் காட்சி கொடுத்தார். அன்னையின் புதுமையை எண்ணி படகில் செபித்து அழுதார். விடிந்த பின் கிராமத்திலுள்ளவர்கள் கரையோரம் இருந்த படகு, அதில் உறங்கிய பெரியவர், வலைகள் ஆகியவற்றைக் காணாமல் பயந்து போனார்கள். கிராமப் பெரியவர்கள் இவ்வூர் இளைஞர்களை ஒன்று திரட்டி கடலுக்குள் தேடிவருமாறு அனுப்பி வைத்தார்கள். தேடிச் சென்ற வாலிபர்கள் கண்ணில் படகும், பெரியவரும் தென்பட்டார்கள். வேகமாக அருகில் சென்று அவரைக் காப்பாற்றினார்கள். எந்தவித ஆபத்தும் இல்லாமல் பெரியவர் அன்னை மரியாளின் வழியாக காப்பாற்றப்பட்ட நிகழ்ச்சி அவ்வூர் மக்களின் மனதில் புதுமையாக இன்றளவும் பேசப்பட்டு வருகின்றது.

(2) பழவேற்காடு சுற்றி பல மீனவ கிராமங்கள் இருந்து வந்தன. குறிப்பாக தொழில் முறையிலும் கிராமத்தில் நிர்வாக அடிப்படையிலும் பழக்க வழக்கத்திலும் பலமுறை சிக்கல்கள் ஏற்பட்டு வந்தன. நாளடைவில் இச்சிக்கல்கள் வலுவடைந்து ஒரு பெரிய போராக மாறி இருவர் படுகொலைக்கும் மற்றவர்கள் காயங்களுக்கும் உட்பட்டனர். இவற்றின் விளைவாக கிறிஸ்தவர்கள் நான்கு பேருக்கு சிறைத்தண்டனையும் பிறகு இவர்களுக்கு தூக்கு தண்டனையும் அளிக்கப்பட்டது. மற்றவர்கள் குறுகிய கால சிறை தண்டனைக்கு உட்பட்டனர். தூக்கு தண்டனைக்கு ஆயத்தமாக தனித்தனி அறையில் அவர்கள் அடைக்கப்பட்டனர். அப்படி இருக்கும்போது ஒருவர் கனவில் மாதா தோன்றி அவர் சொப்பனத்தில் மாதாவின் கிரீடம் கோயிலில் காணாமல் போய்விட்டது என்றார். இந்த நிகழ்ச்சியை மறுநாள் பொழுது விடிந்ததும் மற்ற மூவரிடம் சென்று மாதாவின் கிரீடம் காணாமல் போய்விட்டது என்றார். அப்படி சொல்லும்போது மற்றவர் நாம் அனைவரும் சிறையில் இருக்கிறோமே அது எப்படி உனக்குமட்டும் தெரியும் !என்ன உளறுகிறாய், என்றனர். மறுநாள் உறவினர்கள் சிறையில் உள்ளவர்களை சந்திக்க வந்தபோது, இவர்கள் நலன் விசாரித்தார்கள். பிறகு இவர்களுக்குள் பேசிக்கொண்டிருக்கும்போது கோயிலின் மாதா கிரீடம் காணாமல் போய்விட்டது என்றார்கள். உடனே நால்வரில் ஒருவர் நேற்று நான் கனவில் மாதாவை பார்த்தேன் என்று கூறினார்.

சில மாதங்கள் கழித்து தூக்கு போட நாட்கள் நெருங்கியது. அந்த நேரத்தில் இரண்டாம் உலகப்போர் மூண்டது. இந்த போருக்கு இந்தியாவுக்கு அதிக சிப்பாய்கள் தேவைப்பட்டதால் சிறையிலிருந்த தூக்கு தண்டனை கைதிகளையும், ஆயுள் கைதிகளையும் இராணுவத்திற்கு அனுப்பினர். இதில் நால்வரும் இராணுவத்திற்கு சென்றார்கள். நாளடைவில் உலகப்போர் முடிந்ததும் இவர்களை விடுதலை செய்தார்கள். இவர்கள் மாதாவின் புதுமையினால் குறுகிய காலத்தில் தூக்கு தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டு எவ்வித ஆபத்துமின்றி வீடு சேர்ந்தார்கள். மக்கள் ஆச்சரியமடைந்து இவர்களை ஆரவாரத்தோடு ஊரிலே அழைத்து வந்தனர். இதுவும் மாதாவின் புதுமைகளில் ஒன்றாகும்.

## 9. மகிமை மாதா திருத்தல ஆடம்பர ஆண்டுத் திருவிழா

ஒவ்வொரு ஆண்டும் மகிமை மாதா ஆடம்பரத் தேர்த்திருவிழா இயேசுவின் உயிர்ப்பு விழாவிற்கு (ஈஸ்டர் விழா) பின்வரும் இரண்டாம் வாரத்தில் சிறப்பாகக்கொண்டாடப்படுகிறது. ஈஸ்டர் பெருவிழா முடிந்ததும், வியாழக்கிழமை அன்னையின் விழாக் கொடியேற்றப்படும். 9 நாட்கள் நவநாட்கள் சிறப்பிக்கப்பட்டு 2–ம் சனிக்கிழமை தேர்ப்பவனி நடைபெற்று, ஞாயிறு ஆடம்பரத் திருப்பலியோடு முடிவடையும்.

மேலும் விழா ஞாயிறன்று பிற்பகல் 2 மணி முதல் சாதி, மத இன வேறுபாடின்றி எல்லா மீனவர் குடும்பங்களையும் சேர்ந்த பிற மதத்தினர் அன்னையின் திருத்தலத்தை அலையென நாடிவந்து காணிக்கைகளைச் செலுத்தி தங்களது வேண்டுதலை நிறைவேற்றுவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

500 ஆண்டு கால பழமை வாய்ந்த இத்திருத்தலத்தில் இன்றும் அன்னை மரியாள் ஓயாத அருளாசியால் பல புதுமைகளை நாள்தோறும் தன் அடியவர்களுக்கு வழங்கிய வண்ணம் உள்ளாள்.

இப்படி அன்னையின் புதுமைகளையும், மகிமைகளையும் சொல்லிக்கொண்டே போகலாம். நீங்களும் அதனைக் கண்டு பார்க்க வேண்டாமா? அன்னையின் அருளினைப் பெற வேண்டாமா?

நகர வாழ்க்கையின் ஆரவாரங்களின்றி அலை கடலின் தாலாட்டில் அமைதியான சூழ்நிலையில் உள்ள பழவேற்காட்டில் கோயில் கொண்டுள்ள அன்னை மகிமை மாதாவை தரிசிப்பது மனதிற்கு அமைதியையும், நம்பிக்கையும் தரும் என்பது அவளின் அருளை அனுபவித்தவர்களுக்கே தெரியும்.

இத்திருத்தலம் தற்போது பழுது அடைந்து இருப்பதாலும், திருவழிப்பாட்டு நேரத்தில் பங்கு மக்களுக்கு இடம் போதாமையாலும் இத்திருத்தலத்தை புதிதாக எழுப்ப பங்கு மக்களும், பங்கு குருவும் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

நல்ல உள்ளம் படைத்த அடியவர்களும், பக்தர்களும் எந்தவிதமான சிறிய நன்கொடை கொடுத்தாலும் அது அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

அன்னை மரியாளின் பரிந்துரையால் இறையாசீர் உங்கள் உள்ளங்களையும், இல்லங்களையும் நிரப்புவதாக!

*நீங்கள் நன்கொடையாக அனுப்ப வேண்டிய முகவரி*

**பங்கு தந்தை**
**புனித மகிமை மாதா திருத்தலம்**
பழவேற்காடு–601 205, பொன்னேரி தாலுக்கா
திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி ~~04119-276460,~~ 954119–276460

27976460

# மகிமை அன்னையை நோக்கி நவநாள் மன்றாட்டு

புதுமை மிக்க மகிமை மாதாவே! உம்மை அண்டி வரும் அனைவரையும் ஆதரித்து அரவணைத்து காப்பவளே, மாட்சிமைமிகு மகிமை மாதாவே! உமது பரிவான பரிந்துரையால் இறைவன் எமக்கு ஏராளமாக அருளைப் பொழிந்து இகபர நன்மைகளை நாளும் அருளுமாறு வேண்டுகின்றோம்.

இத்திருத்தலத்திலிருந்து கோடான கோடி மக்களுக்கு உமது திருமகனிடம் பரிந்து பேசி புதுமைகள் புரிபவளே! இல்லையென்று வந்தோர்க்கு இல்லையென்று கூறியறியாத அன்புத்தாயே நாங்கள் இப்போது கோரும் உதவிகளை பெற்றுத்தந்தருளும்.

தேவைகளை குறிப்பிடவும்.........................................................
உமது வல்லமையில் நம்பிக்கை வைத்து மன்றாடும் எம்மையும், எம் குடும்பத்தினரையும் வழி நடத்தியருளும். மகிமை மாதா! என்று உம்மை நெஞ்சார வாழ்த்தும் உம் நேய மைந்தர் எம்மை பாதுகாத்தருளும்.!

மகிமை மாதாவே! எங்களுக்காகவும், இத்திருத்தலத்தை நாடி வருவோருக்காகவும் இப்போதும், எங்கள் மரண நேரத்திலும் உம் திருமகனிடம் வேண்டிக்கொள்ளும் – ஆமென்.

## மகிமை மாதாவின் மன்றாட்டு மாலை

ஆண்டவரே இரக்கமாயிரும்
கிறிஸ்துவே இரக்கமாயிரும்
ஆண்டவரே இரக்கமாயிரும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாய்க்கேட்டருளும்
விண்ணகத்திலிருக்கின்ற பிதாவாகிய இறைவா
எங்கள் மேல் இரக்கமாயிரும்.
உலகத்தை மீட்ட சுதனாகிய இறைவா
எங்கள் மேல் இரக்கமாயிரும்,
பரிசுத்த ஆவியாகிய இறைவா
எங்கள் மேல் இரக்கமாயிரும்,

அதிபுனித திரித்துவமாயிருக்கிற ஒரே இறைவா
எங்கள் மேல் இரக்கமாயிரும்.
நித்திய காலமாகவே, இறைவனின் தாயென்று முன் நியமனம்
பெற்றவளான மகிமை மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்
பரம தந்தைக்கு மிகவும் உகந்த மகளான மகிமை மாதாவே,
மீட்பர் பெருமானின் தாயாரான மகிமை மாதாவே,
சீயோனின் மாண்புமிகு மகளான மகிமை மாதாவே,
அருள் வாழ்விலே எங்கள் அன்னையாகிய மகிமை மாதாவே,
எங்கள் அன்புமிக்க அன்னையாகிய மகிமை மாதாவே,
புனிதமிக்க மகிமைகளோடு, கருவாய்,
உதித்தவளாகிய மகிமை மாதாவே,
சென்மப்பாவக் கறையேதுமின்றிப் பாதுகாக்கப்பட்ட மகிமை மாதாவே,
கன்னிமைக்கும், தாய்மைக்கும் தனிப்பெரும்
எடுத்துக்காட்டாய் திகழும் மகிமை மாதாவே
பரிசுத்த ஆவியாரால் நிழலிடப்பெற்ற மகிமை மாதாவே
பேறு பெற்றவள் என்று எலிசபெத்தினால் வாழ்த்தப் பெற்ற மகிமை மாதாவே
மீட்பின் வாக்குறுதியில், நம்பிக்கை கொண்டவளான மகிமை மாதாவே
பரம தந்தையின் சுதனையே பெற்றெடுத்தவளான மகிமை மாதாவே
வாழ்வானவரையே, உலகிற்கு அளித்தவளான மகிமை மாதாவே
பெற்றெடுத்த குழந்தையை இடையர்க்கும், ஞானியருக்கும், பெருமையுடன் காண்பித்தவளாகிய மகிமை மாதாவே
ஆண்டவருடைய அடிமையான மகிமை மாதாவே,
இயேசுவுக்கும், அவருடைய திருப்பணிக்கும், முற்றும்
பிரமாணிக்கமாயிருந்த மகிமை மாதவே
கானாவூரிலே கனிவுடன் பரிந்துரைத்து ஒரு புதுமையை
அடைந்து தந்தவளான மகிமை மாதாவே,
விசுவாசத் திருப்பயணத்திலே, வீறுடன் முன்னேறியவளான
மகிமை மாதாவே
சிலுவை மரணம் வரை யேசுவோடு, ஒன்றித்திருந்த
மகிமை மாதாவே
மீட்பின் மறைபொருளுக்கு, முற்றும் பணிந்துழைத்தவளான
மகிமை மாதாவே
இடைவிடாத செபத்தினாலே இளந்திருச்சபைக்கு
உதவியவளான மகிமை மாதாவே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்
ஆன்ம சரீரத்தோடு விண்ணுலகுக்கு எடுத்துக்
கொள்ளப்பட்ட மகிமை மாதாவே
விண்ணவர்க்கும் மன்னவர்க்கும் மேலாக உயர்த்தப்
பெற்றவளான மகிமை மாதாவே
இத்தரையில் வாழும் கிறிஸ்துவின் உறுப்பினருக்காகக்
கவலை கொள்பவளான மகிமை மாதாவே,
கிறிஸ்துவ மக்களை கண்ணோக்கிப் பார்க்கும் கன்னித்

தாயாகிய மகிமை மாதாவே,
மீட்புப் பெற எமக்குள்ள அவசியத் தேவையிலே
எம்மோடு ஒன்றாயிருக்கும் மகிமை மாதாவே
கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாக திருச்சபையில் மிக
உயர்ந்தவளான மகிமை மாதாவே
திருச்சபையின் உறுப்பினரில் எல்லாம் மகா
உன்னதமானவளான மகிமை மாதாவே
திருச்சபையில் உறுப்பும் முதல் மலருமான மகிமை மாதாவே
எல்லா புண்ணியங்களுக்கும் மாதிரியான மகிமை மாதாவே
உறுதியான நம்பிக்கைக்கும் ஆறுதலுக்கும்
அடையாளமான மகிமை மாதாவே
எல்லா தலைமுறைக்கும் பேறு பெற்றவள் என்று வாழ்த்தி
வரம் பெற்றவளான மகிமை மாதாவே
புனிதர்களின் உறவிலே உம் திரு மகனிடம் பரிந்து
பேசுகிறவளான மகிமை மாதாவே
பழவை நகரிலே திருத்தலம் கொண்டு புதுமைகள்
பொழிபவளான மகிமை மாதாவே
இல்லையென்று அழுது உம்மை நாடியவர்க்கு
இல்லையென்று கூறியறியாத மகிமை மாதாவே

உம் திருமகனின் தாயாராக மகிமை மாதாவைத் தேர்ந்தெடுத்து, எல்லாத் தலைமுறைகளும், அவளைப் பேறு பெற்றவள் என வாழ்த்த வேண்டுமென்று விரும்பிய பரமதந்தையே, உமக்கு நன்றி கூறி உம்மை மன்றாடுகிறோம்.

மகிமை மாதாவுக்கு மகத்தான காரியங்களைச் செய்து அவளை ஆன்ம சரீரத்தோடு விண்ணுலக மகிமைக்கு எடுத்துச் சென்ற பரம தந்தையே, உம் பிள்ளைகளாகிய எங்கள் இதயங்கள் கிறிஸ்துவின் மகிமையால் நிரம்பியருள வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.

மகிமை மாதாவின் மன்றாட்டினால், இறைமக்கள் அனைவரும் ஒன்றித்திருந்து அன்பிற்கு இலக்கணமாய் வாழ வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.

மகிமை மாதாவை கண்ணோக்கியருள, அவளை இரக்கத்தின் மாதாவாக ஆக்கிய இறைவா, ஆபத்துக்களில் இருப்பவர்கள் இந்த நல்ல தாயின் அன்பின் ஆழத்தை, உணரச்செய்தருள வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.

இயேசுவும், சூசையப்பரும் வாழ்ந்த இல்லத்திலே, மகிமை மாதாவே தாயாக விளங்க வேண்டுமென்று நியமித்த இறைவா, எல்லா தாய்மார்களும் தங்கள் இல்லங்களை அன்புக்கும், புனிதத்துக்கும் உறைவிடமாக ஆக்கிட அவர்களுக்கு உதவ வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.

சிலுவையடியிலே, துன்பங்களை தாங்கி நின்றிட மகிமை மாதாவுக்குப் பலம் தந்த இறைவா, துயருற்றோருக்கு நம்பிக்கையூட்டி ஆன்ம பலம் அருள வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.

ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

உம் திருமகன் தங்கும் இல்லமாகவும், பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாகவும், மகிமை மாதாவை ஆக்கியவருமாகிய இறைவா, நாங்கள் எங்கள் மனதிலும், இதயத்திலும், உடலிலும், உமது ஆவியானவரை ஏந்தி வாழ்பவர்களாக எம்மை ஆக்க வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.

மகிமை மாதாவை விண்ணுலக அரசியாக முடிசூட்டி மகிமைப்படுத்திய இறைவா, ஆன்மாக்கள் உம் அரசினுள் நுழைந்து புனிதர்களோடு என்றென்றும் மகிழ்ந்திருக்கச் செய்தருள வேண்டுமென மன்றாடுகிறோம்.

முதல் :– இயேசு கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதியுள்ளவர்கள் ஆகும்படி

துணை : – மகிமை மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

# செபிப்போமாக

ஆண்டவரே, உம் மக்களின் பாவங்களை மன்னித்தருளும், உமது திருமுன் தகுதியான எதையும் செய்ய எங்களுக்கு ஆற்றல் இல்லை என்பதினால், எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தாயாகிய மகிமை மாதாவின் வேண்டுதலை முன்னிட்டு எம்மைப் பாதுகாத்தருளும், பராமரித்தருளும். எமக்கு நிறைவான ஒற்றுமையையும், சமாதானத்தையும், மகிழ்ச்சியையும், தந்தருளும். உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி புரிகின்ற அவர் வழியாகவே உம்மை மன்றாடுகிறோம்.

– ஆமென்.

# செபமாலையின் வரலாறு

ஆதிகால திருச்சபையின் தொடக்கத்திலிருந்தே திருத்தூதர்களும், இதர விசுவாசிகளும் கர்த்தர் கற்பித்த செபத்தையும், அருள் நிறைந்த மரியே என்ற வானதூதரின் வாழ்த்துச் செபத்தையும் உருக்கமாகப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

ஆனால் இன்று செபிக்கும் கன்னிமரியின் செபமாலையை, கி.பி. 1214ல் தான் புனித தோமினிக் வழியாக அன்னை மரியாள் திருச்சபைக்கு வழங்கினார்கள். அக்காலத்தில் ஆல் பிஜென்சியன்ஸ் என்ற முரண்பாட்டுக் கொள்கையினர் மனம் மாறி திருச்சபைக்குத் திரும்பி வரவேண்டுமென்று புனித தோமினிக் செபித்துவந்தார். பிரான்ஸ் நாட்டில் உள்ள ஒரு காட்டுக்குள் சென்று பாவிகள் மனந்திருந்த வேண்டி செபித்தார். மூன்றாம் நாள் செபத்தின், தவத்தின் விளைவால் உணர்வற்ற நிலையில் இருந்தார். அப்பொழுது அன்னை மரியாள் புனித தோமினிக்குக் காட்சி தந்து எதிரிகளை, முரண்பாட்டுக்கொள்கையினர்களை, பாவிகளை முறியடிக்கும் ஒரே கருவி செபமாலை என்று சொல்லி, செபமாலையை எப்படி செபிப்பது என்று கற்றுக் கொடுத்தார்கள்.

அந்த நாளிலிருந்து தனது வாழ்நாள் முழுவதும் புனித தோமினிக் செபமாலையின் புகழையையும் பெருமையையும் தனது மறையுரைகளின் வழியாகப் போதித்து அறிக்கையிட்டு வந்தார்.

படிப்பறியாத பாமரமக்கள், தாவீது எழுதிய 150 திருப்பாக்களையும் செபிக்க முடியாத வேளையில், கன்னிமரியாள் கொடுத்த செபமாலை பேருதவியாக இருந்தது. செபமாலையில் நாம் செபிக்கும் 150 அருள் நிறைந்த மரியே என்ற செபம் 150 திருப்பாக்களை ஒத்ததாக அமைந்திருப்பதை நாம் கருத்தில் கொள்வது நல்லது.

செபமாலையின் மகிமையைப் பற்றி அன்னை மரியாள் பலருக்குத் தோன்றி விளக்கியுள்ளார்கள். ஒவ்வொரு முறையும் நீங்கள் "அருள் நிறைந்த மரியே" என்ற செபம் சொல்லும்போது, எனக்கு ஒரு ரோசாப்பூவை அன்பளிப்பாக அளிக்கின்றீர்கள் என்கிறார்கள். செபமாலையை முழுமையாக எல்லா பேருண்மைகளையும் தியானித்து செபிக்கும் பொழுது, எனக்கும் இயேசுவுக்கும் ரோசாக்களைக் கோர்த்த கிரீடமாக நீங்கள் கொடுக்கிறீர்கள் என்றும் கூறியுள்ளார்கள். ரோசா மலர் பூக்களின் அரசி. ஆகவே செபமாலை என்பது முக்கியமான பக்தி முயற்சிகளின் ரோசாமலர் என்பது தெளிவாகப் புலனாகும்.

# செபமாலை ஜெபிப்போம்

## I. சந்தோஷ தேவ இரகசியம் (திங்கள், சனி)

1. கபிரியேல் அதிதூதர் தேவமாதாவுக்கு மங்கள வார்த்தை சொன்னது.
2. தேவமாதா எலிசபெத்தம்மாளை சந்தித்து.
3. இயேசு மனிதராக பிறந்தது.
4. இயேசுவை கோவிலில் காணிக்கையாக ஒப்புக் கொடுத்தது.
5. 12–வயதில் காணாமல் போன இயேசுவை கோவிலில் கண்டடைந்தது.

## II. ஒளியின் தேவ இரகசியம் (வியாழன்)

1. இயசே யோர்தான் நதியில் திருமுழுக்கு பெற்றது.
2. கானாவூர் திருமணத்தில் இயசே தண்ணீரை இரசமாக மாற்றியது.
3. இறையரசு நெருங்கி விட்டது என இயேசு அறிவித்தது.
4. தாபோர் மலையில் இயேசு உருமாறியது.
5. இயசே திவ்ய நற்கருணையை நிறுவியது.

## III. துக்க தேவ இரகசியம் (செவ்வாய், வெள்ளி)

1. இயேசு பூங்காவனத்தில் இரத்த வியர்வை வியர்த்தது.
2. இயேசுவை கற்றூணில் கட்டி கசையால் அடித்தது.
3. இயேசுவின் தலையில் முள்முடி சூட்டியது.
4. இயேசு சிலுவை சுமந்து சென்றது.
5. இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்தது.

## IV. மகிமை தேவ இரகசியம் (புதன், ஞாயிறு)

1. இயேசு உயிர்த்தெழுந்தது
2. இயேசு பரலோகத்திற்கு எழுந்தருளியது.
3. பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள் மீதும், தேவ மாதாவின் மீதும் எழுந்தருளி வந்தது.
4. தேவமாதா உடலோடு பரலோகத்திற்கு எடுக்கப்பட்டது.
5. தேவமாதா விண்ணுக்கும், மண்ணுக்கும் அரசியாக முடிசூட்டப்பட்டது.

# செபமாலை – ஜெயமாலை

எப்பொழுதும் ஜெபமாலையை நம்மிடம் வைத்திருப்பதற்குப் பல நல்ல காரணங்கள் உண்டு. அவற்றில் சில :–

1. வெறுமனே தன்னுடன் ஜெபமாலையைக் கொண்டு செல்வதற்கே பலன் அளித்துள்ளது.

2. ஜெபமாலை மந்தரிக்கப்பட்டிருப்பதால் அது ஒரு அருட் கருவியாக இருக்கின்றது.

3. ஒவ்வொரு ஜெபமாலையிலும் மந்திரிக்கப்பட்ட ஒரு பாடுபட்ட சுரூபம் உள்ளது.

4. மாதா பக்தியின் தனிச் சிறந்த சின்னம் ஜெபமாலை.

5. எப்போதும் ஜெபமாலையைத் தன்னுடன் கொண்டு செல்வதால் சமயாசமயங்களில் ஜெபமாலை சொல்வதற்கு அது தூண்டுதலாக இருக்கிறது. அது நம்முடன் எப்பொழுதும் இருப்பதால் உறங்கும் மனசாட்சியை விழிப்படையச் செய்கிறது.

6. தான் நேசிக்கிறவர்களின் உருவப் படத்தைத் தன்னுடன் எப்பொழுதும் எடுத்துச் செல்வது இயல்பான ஒரு காரியம். நமது தேவ அன்னையின் உருவப்படம் ஜெபமாலை.

7. ஜெபமாலையைத் தொடுவதே சோதனையை வெல்ல உதவியளிக்கிறது.

8. ஜெபமாலை எப்போதும் இருந்தால் எதிர்பாராத ஒய்வு நேரங்கள் கிடைக்கும்போது, ஜெபமாலை சொல்வதற்கு நாம் ஆயத்தமாக இருக்கிறோம்.

9. ஏதாவது விபத்து ஏற்பட்டால் அந்த ஆள் கத்தோலிக்கர் என ஜெபமாலை மணிகள் எப்போதும் அடையாளப் படுத்திவிடும்.